செ.வெ.எண்:14/ஜனவரி நாள்: 08.01.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு பார்த்திபனூர், எமனேஸ்வரம்,சத்திரக்குடி, நயினார்கோயில் ஆகிய கிராமங்களில் உள்ள 4029 குடும்ப அட்டைதாரர்களுக்கு**

**மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பினை பயனாளிகளுக்கு வழங்கினார்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் கிராமத்திலுள்ள 1536 குடும்ப அட்டைதாரர்கள், எமனேஸ்வரம் கிராமத்திலுள்ள 938 குடும்ப அட்டைதாரர்கள், சத்திரக்குடி கிராமத்திலுள்ள 765 குடும்ப அட்டைதாரர்கள், நயினார்கோயில் கிராமத்திலுள்ள 790 குடும்ப அட்டைதாரர்கள் என ஆக மொத்தம் 4029 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினை மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் இன்று (08.01.2016) வழங்கினார்.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், ஏழை, எளிய மக்கள் அனைவரும் பொருளாதாரத்தில் ஏற்றம் பெற்று அவர்தம் வாழ்க்கையில் உயர்ந்த நிலையினை அடைந்திட வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் பல்வேறு மக்கள் மேம்பாட்டு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு ஏழை, எளிய மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் பொங்கல் பண்டிகையினை கொண்டாடும் விதமாக அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஒவ்வொரு அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 2 அடி நீள கரும்பு மற்றும் ரொக்கமாக ரூ.100/- அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பாக வழங்கிடும் வகையில் தமிழகத்தில் உள்ள 1.91 கோடி அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுப் பொருட்கள் ரூபாய் 318 கோடி மதிப்பில் வழங்கப்பட்டு வருகிறது. அவற்றில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 3 இலட்சத்து 43 ஆயிரத்து 585 குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இதுதவிர, பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு மொத்தம் ரூபாய் 486 கோடியே 36 இலட்சம் மதிப்பில் 1,68,04,986 சேலைகள் மற்றும் 1,67,89,404 வேட்டிகள் வழங்கப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் 3 இலட்சத்து 2 ஆயிரத்து 826 வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டு வருகிறது. எனவே தமிழக அரசு பொதுமக்கள் நலனை மேம்படுத்திடும் விதமாக தொடர்ந்து பல்வேறு மக்கள் மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.து.ஆரோக்கிய சுகுமார், முதுகுளத்தூர் கூட்டுறவு நிலவள வங்கித்தலைவர் திரு.இரா.தர்மர், பரமக்குடி நகர்மன்றத் தலைவர் திருமதி.கீர்த்திகா முனியசாமி, போகலூர் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் திரு.நாகநாதன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு.சுரேஷ், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் திரு.முத்தையா மற்றும் கூட்டுறவு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**